**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**வழக்கு எண் : OS No:89/2013 தேதி: 23.06.2025**

**வா.சா.2 – முனியசாமி**

**3, 4, 6, 8 முதல் 20, 23 மற்றும் 25 முதல் 32 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

வழக்கை தாக்கல் செய்த முதல் வாதி கஸ்தூரி அம்மாள் எனது தாயார் என்றால் சரிதான். எனக்கு இந்த வழக்கு விவரம் மற்றும் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். என்ன பரிகாரம் என்றால் பிரதிவாதிகள் வில்லங்கம் செய்த சொத்துக்களை எங்களுக்கு தர வேண்டும் என்று கேட்டுள்ளோம். அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.195/2012 என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை Null & Void பரிகாரம் கோரியது தான் பிரதான பரிகாரம் என்பது எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. நான் பிசினஸ் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1–ஐ எதிர்த்து மேல்முறையீடாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை, தீர்ப்பை எதிர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம். அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.195/2012 என்ற வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை மேல்முறையீடு மனுவாக தாக்கல் செய்ய மட்டுமே இந்த மாண்புமிகு நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ள நிலையில் அந்த நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை Null & Void என விளம்புகை செய்ய இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பது சட்டப்படியாக

ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண்.195/2012 என்ற வழக்கில் யார் யார் வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1–ன் படி நானும், எனது அண்ணன் நாகையா என்பவரும் வாதியாகவோ, பிரதிவாதியாகவோ இல்லை என்றால் சரிதான். நாங்கள் வெளியூரில் இருந்ததால் எங்களை வழக்கு நடவடிக்கையில் சேர்க்கவில்லை. அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.195/2012 என்ற வழக்கில் பிரதிவாதிகளாக உள்ள கஸ்தூரியம்மாள், மாரியம்மாள், ராஜசூரியா மற்றும் கிருஷ்ணவேணி ஆகியோர் இந்த வழக்கிலும் வாதிகளாக உள்ளார்கள் என்றால் சரிதான். அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.195/2012 என்ற வழக்கில் நான் தரப்பினராக இல்லாத நிலையில் அந்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்தால் அந்த வழக்கு நடவடிக்கையில் தரப்பினர்களாக உள்ள அனைவரையும் இந்த அசல் வழக்கில் பிரதிவாதிகளாக காட்டியிருக்க வேண்டும் என்றாலும் மாறாக அந்த வழக்கின் பிரதிவாதிகளே இந்த வழக்கில் வாதிகள் என்ற நிலையில் வழக்கை தாக்கல் செய்திருப்பது சட்டப்படியாக ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி அழகர்சாமி நாயுடு, அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.195/2012 என்ற வழக்கிலும் 1வது பிரதிவாதியாக வழக்காடியுள்ளார் என்றால் சரிதான். கடந்த 2012–ம் வருடம் அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.195/2012 என்ற வழக்கு தாக்கல் செய்யும் பொழுது எனது அண்ணன் நடராஜன் இறந்துவிட்டார்

என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3–ல் " 2, 3, 4, 5–ஆம் பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்த போது ஆஜராகாத நிலையில் ஒருதலைப்பட்சமாகப்பட்ட நிலையில்" அடிப்படையில் கீழ்க்கண்டவாறு வழங்கிடும் தீர்ப்புரை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கேள்விப்பட்ட வரையில் மேற்படி பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சார்பு செய்யப்படவில்லை என்று சொன்னார்கள். மேற்படி சங்கதியை நாங்கள் எங்களது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஒரு வழக்கு நடவடிக்கையில் நீதிமன்ற அழைப்பாணையை பெற்றுக் கொண்டு, நீதிமன்றத்தை மதிக்காமல் வழக்கு நடவடிக்கைக்கு ஆஜர் ஆகாத நபர்கள் அந்த வழக்கினை எதிர்த்து புதிய வழக்கு தாக்கல் செய்திட சட்டப்படியான சட்ட உரிமை இல்லை என்றால் சரியல்ல. நானோ, எனது அண்ணன் நாகையாவோ, அல்லது மற்ற வாதிகளோ மேற்படி நீதிமன்றம் அந்த பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பித்த ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்த அந்த சமயத்தில் அதே நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். அதற்காகத் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒருதலைப்பட்ச உத்தரவு பற்றி எனக்கு உத்தரவு பிறப்பித்த ஒரு வருடத்திற்குள் தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 உரிய நீதிமன்றத்திலிருந்து பெற்பட்ட சான்றிட்ட ஆவணம் இல்லை என்றால் சரிதான். அந்த ஆவணம் எப்படி எங்களுக்கு கிடைக்கப் பெற்றது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.1 கீழமை நீதிமன்றத்தில் அந்த வழக்கு நடவடிக்கையில் பிரதிவாதிகளுக்கு சார்பு செய்யப்பட்ட அழைப்பாணையுடன் கூடிய வழக்குரை என்றாலும், அந்த வழக்குரையைதான் தற்போது வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துவிட்டு, தற்போது எப்படி கிடைக்கப்பெற்றது என்ற சங்கதியை ஒப்புக்கொண்டால்

எங்கள் வழக்கிற்கு பாதகமாக போய்விடும் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்குச் சொத்து எனக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் இந்த சொத்துகள் எங்களுக்கும், 1–ம் பிரதிவாதி அழகர்சாமி நாயுடுவிற்கும் பாத்தியமான பூர்வீக சொத்துக்கள், அதனை நாங்கள் 1–ம் பிரதிவாதியுடன் பாகப்பிரிவினை செய்து கொண்ட வகையில் எங்களுக்கு பாத்தியமான சொத்து ஆகும். 1–ம் பிரதிவாதி அழகர்சாமி நாயுடுவின் அப்பாவும், எனது அப்பாவும் அண்ணன் தம்பிகள் கிடையாது என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதி அழகர்சாமி நாயுடுவின் தந்தை வழித் தாத்தாவும், எனது தந்தை வழித் தாத்தாவும் அண்ணன் தம்பிகள் கிடையாது என்றால் சரிதான், நாங்கள் சம்பந்தகாரர்கள். பொதுவாக பூர்வீக சொத்து என்பது பங்காளிகளுக்குள் தான் பாகப்பிரிவினை செய்யப்படும், சம்பந்தகாரர்களுக்குள் பாகப்பிரிவினை செய்யப்படாது என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதி அழகர்சாமி நாயுடுவின் அம்மாவும், எனது அம்மாவும் அக்கா தங்கை கிடையாது என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதி அழகர்சாமி நாயுடுவின் அம்மா வழிப் பாட்டியும், எனது அம்மா வழிப் பாட்டியும் அக்கா தங்கை கிடையாது என்றால் சரிதான். அழகர்சாமியின் அம்மா எனக்கு பெரியம்மா. எனது அம்மா உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 2 ஆண்கள், 3 பெண்கள். அவர்கள் கஸ்தூரியம்மாள், நாகம்மாள், காவேரியம்மாள் மற்றும் லெட்சுமியம்மாள். அழகர்சாமியின் அம்மா பெயர் லெட்சுமியம்மாள். எனது தயாரை பெற்ற அம்மாச்சி பெயர் சின்னத்தாயம்மாள். மேற்படி லெட்சுமியம்மாள், சின்னத்தாயம்மாளின் மகள். நான் இந்த வழக்கிற்காக எனது அம்மாவுடன் பிறக்காத லெட்சுமியம்மாள் என்பவரை எனது அம்மாவுடன் பிறந்த சகோதரி என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. எனது அம்மாவுடன் பிறந்த பெரியம்மா ஸ்ரீரங்கம்மாள் என ஒருவர் இருந்தார் என்றால் சரிதான். எனது அம்மாவுடன் பிறந்த சகோதரியாக ரெங்கம்மாள் எனவும் ஒருவர் இருந்தாரா என்றால், அது நினைவில் இல்லை. அவர் 1–ம் பிரதிவாதியின் அக்கா. எனது அண்ணன் நாகையா இந்த வழக்கில் சொன்ன சாட்சியம் உண்மையா என்றால் சரியாகதான் இருக்கும். ஏற்றுக் கொள்ளலாம். எனது அண்ணன் நாகையா இந்த வழக்கில் சாட்சியம் அளித்த போது எனது அம்மாவின் உடன்பிறந்தவர்களாக மேற்படி லெட்சுமியம்மாளை சொல்லவே இல்லை என்றும், நான் பொய்யாக சாட்சியம் அளிப்பதால் தான் எனது அம்மாவின் உடன் பிறந்த சகோதரிகளை எனது அண்ணன் சொன்ன பெயர்களை விடுத்து, கூடுதலாக லெட்சுமியம்மமாள் பெயரையும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது அம்மா கஸ்தூரியம்மாள் பிறந்த ஊர் முடுக்கன்குளம். வழக்கு சொத்துக்கள் முடுக்கன்குளத்தில் தான் உள்ளது. எனது அம்மா திருமணம் முடிந்து வத்தலகுண்டுவிற்கு வாழச் சென்றார். எனது அப்பாவின் பூர்வீகம் வத்தலகுண்டு என்றால் சரிதான். எனது அப்பா அம்மா கணவன் மனைவியாக முடுக்கன்குளத்தில் வாழ்ந்தார்கள் என்பதற்கு எந்தவித ஆவண ஆதாரங்களும் இல்லை என்றால் நிறைய உள்ளது. எனது அப்பா முடுக்கன்குளத்தில் குடியிருந்தமைக்கு எந்த ஒரு ஆவண ஆதாரமும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எனது அப்பாவின் பெயர் முத்துக்கிருஷ்ணன், எனது அம்மாவுடன் பிறந்த நாகம்மாளின் கணவர் பெயரும் முத்துக்கிருஷ்ணன் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் ஆதியில் எனது பெரியம்மா நாகம்மாளின் கணவர் முத்துக்கிருஷ்ணன் என்பவருக்கு பூர்வீக பாத்தியம் என்றால் சரிதான். முத்துக்கிருஷ்ணன்–நாகம்மாள் தம்பதிக்கு

குழந்தையோ, நேரடி வாரிசுகளோ இல்லாததால் நாங்கள் வழக்கு சொத்திற்கு உரிமை கோருகிறோம் என்றால் சரியல்ல. நாங்கள் பாகப்பிரிவினை பதிவு செய்துள்ளோம். அந்த அடிப்படையில் முடிவிற்கு வந்தோம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 தான் மேற்படி நாங்கள் பதிவு செய்துள்ள பாகப்பிரிவினை ஆவணம். அந்த ஆவணத்தில் எனது பெயரும், எனது அண்ணன் நாகையா பெயரும் இல்லை என்றால் சரிதான். எனது அண்ணன் நடராஜன் என்பவரை குடும்பத்தலைவராக காட்டியுள்ளதால் அது எங்களுக்கும் சமபக்த சகோதரர்கள் அடங்கிய பாகப்பிரிவினை ஆகும். மேற்படி வா.சா.ஆ.4 ஆவணத்தில் அந்த ஆவண சொத்துக்கள் மேற்படி முத்துக்கிருஷ்ணன்–நாகம்மாள் தம்பதியினரின் சொத்துக்கள் என்பதும், அவர்களது வாரிசுகள் என்ற ஸ்தானத்தில் மேற்படி ஆவணம் பாகப்பிரிவினை செய்யப்பட்டுள்ளதாகவும், குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறு சொல்லப்படவில்லை என்றாலும், மேற்படி முத்துக்கிருஷ்ணன்–நாகம்மாள் தம்பதியினரின் வாரிசுகள் என்ற ஸ்தானத்தில் மேற்படி ஆவணம் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. முத்துக்கிருஷ்ணன்–நாகம்மாள் தம்பதியினருக்கு நான் முதல் தரவாரிசோ அல்லது இரண்டாம் தரவாரிசோ என்பதற்கு எந்த ஒரு ஆவணமும் இல்லை என்றால் ஆவணம் உள்ளது. இந்த வழக்கில் அப்படி ஒரு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகம் இல்லை. அப்படி எந்த ஒரு வாரிசு ஆவணமும் இல்லை என்றும், அதனால் தான் அந்த ஆவணத்தை இந்த வழக்கில் எங்கள் தரப்பு ஆவணமாக தாக்கல் செய்யவில்லை, தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. முத்துக்கிருஷ்ணன்–நாகம்மாள் தம்பதியினரின் சொத்துக்களுக்கு நாங்கள் தான் வாரிசு என்று

சொல்லி எந்த ஒரு வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் மேற்படியாரின் வாரிசாக அறிவிக்கும்படி நாங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். வாரிசு உரிமை கோரி எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. முத்துக்கிருஷ்ணன்–நாகம்மாள் தம்பதியினருக்கு பாத்தியமான சொத்தினை எந்தவித வாரிசுரிமை ஆவண ஆதாரம் இல்லாமல் எனது குடும்பத்தார் ஏற்படுத்திக் கொண்டதாக சொல்லும் வா.சா.ஆ.4 சட்டப்படியாக ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அவர்களுடன் ரத்த சம்பந்தமான உறவு இருந்த காரணத்தினால் தான் பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொண்டோம். அந்த ஆவணத்தின் மூலமாக வழக்கு சொத்துக்களில் எங்களுக்கு எந்த உரிமை மூலமும் ஏற்படாது என்றால் சரியல்ல. மேற்படி நாகம்மாளின் உடன்பிறந்தவர்களின் எனது தாயாரின் மக்களான எங்களுக்கு பாகப்பிரிவினை ஏற்படுத்தியது போல எனது தாயாரின் உடன்பிறந்த சகோர, சகோதரிகள் மற்றவர்கள் யார் பெயரிலும் மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தில் பாகம் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். முத்துக்கிருஷ்ணன்–நாகம்மாள் தம்பதியினருக்கு வாரிசு இல்லாத காரணத்தினால் 2–ம் வகுப்பு வாரிசுதாரர்களுக்கு சொத்து சென்றாலும் கூட அது நாகம்மாள் கணவர் முத்துக்கிருஷ்ணனின் உடன்பிறந்தவர்களின் வாரிசுகளுக்கு தான் சட்டப்படியாக சேரும் எனவும், நாகம்மாளின் சகோதரி மக்களான எங்களுக்கு பாக உரிமை ஏற்படாது என்றால் சரியல்ல. நாகம்மாள், நாங்கள் மற்றும் 1–ம் பிரதிவாதி அழகர்சாமியின் பெற்றோர் ஆகியோர்கள் கூட்டுக் குடும்பமாக இருந்தோம். அதனால் பாகப்பிரிவினை ஏற்படுத்திக் கொண்டோம். எங்களது வழக்குரையில் வழக்கு சொத்துக்கள் முத்துக்கிருஷ்ணன்–நாகம்மாள் தம்பதியினருக்கு பாத்தியப்பட்ட

சொத்துக்கள் என்று குறிப்பிடவில்லை என்று சொன்னால் ஞாபகம் இல்லை. நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் வழக்கு சொத்துக்கள் முத்துக்கிருஷ்ணன்–நாகம்மாள் தம்பதியினருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். சொல்லவில்லை. வழக்கு சொத்துக்கள் முத்துக்கிருஷ்ணன்–நாகம்மாள் தம்பதியினருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என வழக்குரையில் குறிப்பிட்டிருந்தால் அது எங்களுக்கு பாதகமாகவும், வா.சா.ஆ.4–க்கு பாதகமாகவும் அமைந்துவிடும் என்பதால் அந்த உண்மையை மறைத்து வழக்கு தாக்கல் செய்தும், சாட்சியம் அளித்தும் உள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கினை நாகம்மாளின் சகோதரியான எனது அம்மா வாதியாக இருந்து தாக்கல் செய்தது போல, எனது அம்மா உடன் பிறந்த மற்ற சகோதர, சகோதரிகள் வாதிகளாக இல்லை என்றால் சரிதான். நாகம்மாளின் கணவர் பெயர் முத்துக்கிருஷ்ணன், எனது அப்பாவின் பெயரும் முத்துக்கிருஷ்ணன் என்பதால் பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி இந்த வழக்கு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நடவடிக்கையில் மற்ற வாதிகளாக உள்ள நடராஜன் அவர்களின் வாரிசுகள் சாட்சி சொல்ல வருவார்களா என்றால் வருவார்கள். இந்த வழக்கு நடவடிக்கைக்கு முன்பாக 1991–ம் ஆண்டு வேலுச்சாமி வகையறா வழக்கில் 1–ம் பிரதிவாதி மற்றும் நடராஜன் என்பவர்கள் மீது அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து வெற்றி பெற்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் ஓரளவிற்கு ஞாபகம் உள்ளது. மேற்படி நடராஜன் எனக்கு அண்ணன். மேற்படி வழக்கு நடவடிக்கையில் எனது அண்ணன் நடராஜன் இந்த வழக்கு சொத்துக்கள்

இந்த வழக்கின் 1–ம் பிரதிவாதி அழகர்சாமிக்கு பாத்தியமான சொத்து என்று சொல்லி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ள விவரங்கள் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி வழக்கின் எதிர்வழக்குரை சங்கதிகளில் எனது அண்ணன் நடராஜன் இந்த வழக்கு சொத்துக்கள் 1–ம் பிரதிவாதி அழகர்சாமி நாயுடுவிற்கு பாத்தியமான சொத்துக்கள் என சொல்லிய ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் அந்த சங்கதிகளை நானும் ஏற்க தயாரா என்றால் படித்துப் பார்த்து ஏற்றுக் கொள்வோம். முந்தைய வழக்கு நடவடிக்கைகளில், இந்த வழக்கின் 4–வது வாதியின் கணவரும், 5 மற்றும் 6 வாதிகளின் தகப்பனாரும் ஆன எனது அண்ணன் நடராஜன் வழக்கு சொத்துக்கள் 1–ம் பிரதிவாதி அழகர்சாமிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என சொல்லி வழக்கு நடவடிக்கை மேற்கொண்ட நிலையில் தற்போது அவரது வாரிசுகளும் நாங்களும் வழக்கு சொத்துக்கள் எங்கள் சொத்துக்கள் என்று உரிமை கோருவது Estoppel (முரண்தடை) தோஷத்தால் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதே போல மேற்படி முந்தைய வழக்கினை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்ட போது 1–ம் பிரதிவாதி அழகர்சாமி மட்டுமே மேல்முறையீடு செய்தார் எனவும், எனது அண்ணன் நடராஜன் மேல்முறையீடு செல்லவில்லை என்ற விவரம் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.8–ல் 1–ம் பிரதிவாதி அழகர்சாமி மட்டுமே மேல்முறையீட்டாளராக உள்ளார் என்றால் சரிதான். அந்த மேல்முறையீட்டு மனுவில் மேல்முறையீடு அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மு.வ.எண்.218/1991 வழக்கினை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த மு.வ.எண்.218/1991–ல் எதிர்வாதிகளாக 1.அழகர்சாமி நாயக்கர், 2.கஸ்தூரி, 3.நடராஜன் ஆகியோர்

காட்டப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தில் உரிமை இல்லாத காரணத்தினால் தான் எனது அம்மாவும், எனது அண்ணனும் மேற்படி மேல்முறையீடு வழக்கில் மேல்முறையீட்டாளராக பங்கேற்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 நீதிமன்ற தீர்ப்பானது இந்த வழக்கின் 1–ம் பிரதிவாதி அழகர்சாமிக்கு ஆதரவாக தீர்ப்பானது என்றால் சரிதான். அந்த தீர்ப்பை எதிர்த்து வேலுச்சாமி வகையறா மாண்புமிகு உயர்நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு சென்றார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.8–ல் உள்ள தீர்ப்புரை சங்கதிகளை இந்த வழக்கு சொத்துக்களைப் பொறுத்து தீர்மானிக்க இந்நீதிமன்றம் கருத்தில் கொள்ளலாம் என்றால் சரிதான். வா.சா.ஆ.8–னை என்ன நோக்கத்திற்காக எங்கள் தரப்பு ஆவணமாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் இந்த வழக்கிற்கு தொடர்புடைய ஆவணம் என்ற அடிப்படையில் தாக்கல் செய்தோம். இந்த தீர்ப்புகளின் அடிப்படையில் வழக்கு சொத்தில் உரிமை கோரவில்லை என்றால் சரிதான். அழகர்சாமி மட்டுமே மேற்கொண்ட மேல்முறையீடு வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பினை மேல் நடவடிக்கைக்கு செல்லாத நடராஜன் குடும்பத்தார் சாதகமாகவோ அல்லது வழக்கு சொத்துகளின் உரிமைக்காகவோ எடுத்துக் கொள்ள முடியாது என்றால் சரியல்ல. 1985–ம் ஆண்டிலேயே வழக்கு சொத்துக்கள் குறித்து பாகப்பிரினை ஆவணம் ஏற்படுத்தியுள்ளோம். இந்த வழக்கின் 2–ம் பிரதிவாதியாக இருந்து இறந்து போன வேலுச்சாமியின் அப்பா பெயர் முத்துத்தேவர் என்றால் சரிதான். அந்த முத்துத்தேவருக்கு எனது பாட்டி சின்னதாயம்மாள் இந்த வழக்கு சொத்துக்களை குறித்து கிரைய ஆவணம் பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றும், அது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி கிரைய விவரம் எனது அண்ணன்

நாகையாவிற்கு தெரியும் என்று சாட்சியம் அளித்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி கிரைய விவரம் பற்றி எனது அண்ணன் நாகையாவிற்கு தெரியும் என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில், நான் அந்த சங்கதிகளை தெரியாது என்று சாட்சியம் அளிப்பது முரண்பாடாக உள்ளது எனவும், பொய்யாக சாட்சியம் அளிப்பதால் தான் அதை மறுக்கிறேன் என்றால் அது சரியல்ல. நான் 1960–ம் ஆண்டு பிறந்தேன். எனது அண்ணன் நாகையா எனக்கு 12 ஆண்டுகள் மூத்தவர். சின்னத்தாயம்மாள், முத்துத்தேவருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சட்டப்படி செல்லாது என்று கோரி எனது குடும்பத்தார் எவ்வித வழக்கு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் மேற்கொள்ளவில்லை. நீதிமன்ற தீர்ப்பே வந்துவிட்ட காரணத்தினால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. முந்தைய வழக்கு நடவடிக்கையின் போது 1987–ம் ஆண்டு நீதிமன்ற ஆணையாளர் வழக்கு சொத்துக்களை பார்வையிட வந்த போது, அந்த இடத்தில் வாதி, பிரதிவாதிகள் வகையறாவிற்கு இடையே அடி தடி சண்டையாகி, எனது அண்ணன் நடராஜன் காயம்பட்டார் என்றால் சரிதான். அந்த சண்டையில் எனது அண்ணன் நீதிமன்றத்தில் ஆஜராகி புகார் அளித்துளார் என்றால் தெரியவில்லை. மேற்படி எனது அண்ணன் தாக்கல் செய்த புகார் நடவடிக்கை ஆவணங்களை இந்த வழக்கின் சாட்சியமாக தாக்கல் செய்ய எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். மேற்படி எனது அண்ணன் விருதுநகர் நீதிமன்றத்தில் வேலுச்சாமி வகையறாவின் மீது கொடுத்த புகாரில் வழக்கு சொத்துக்கள் 1–ம் பிரதிவாதி அழகர்சாமிக்கு சொந்தமான சொத்துக்கள் எனவும், அந்த சொத்து விஷயமாக நீதிமன்ற ஆணையாளர் பார்வையிட வந்த இடத்தில் சண்டை ஏற்பட்டு தன்னை காயப்படுத்திவிட்டதாக சங்கதி சொல்லியுள்ள

விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. அதில் என்னையும் ஒரு குற்றவாளியாக சேர்த்தார்கள். மேற்படி சங்கதியை ஒப்புக்கொண்டால் இந்த வழக்கிற்கு பாதகமாக மாறிவிடும் என்று கருதி நான் ஞாபகம் இல்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த வகையில் எனது அண்ணன் நடராஜன் உயிரோடு இருந்த காலத்தில் வழக்கு சொத்துக்களை அவருக்கு பாத்தியம் என முந்தைய காலத்து நடவடிக்கைகளில் ஒருபோதும் சொல்லவே இல்லை எனவும், வழக்கு சொத்துக்கள் 1–ம் பிரதிவாதி அழகர்சாமிக்கு பாத்தியமான சொத்துக்கள் என்று மட்டுமே சொல்லி வழக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில், தற்போது எனது அண்ணன் நடராஜனின் மறைவிற்கு பின்னர் வழக்கு சொத்துக்கள் எங்களுக்கு பாத்தியம் என உரிமை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளது ஏற்புடையது இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யத்தக்க வழக்கு என்று சொன்னால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.